RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

OPEN ACCESS

DOI: 10.34256/irjt224s-22234

# பத்துப்பாட்டில் தெய்வங்களும் வழிபாட்டு முறைகளும்

சு. வெண்ணிலா [அ, *], நா. சிவாஜிகபிலன் [அ]

[அ] தமிழ்த்துறை, அ.வீரையா வாண்டையார் நினைவு ஸ்ரீ புட்பம் கல்லூரி (தன்னாட்சி), (பாரதிதாசன் பல்கலைக்கழக இணைவுப்பெற்றது), பூண்டி-613503, தமிழ்நாடு, இந்தியா

# Deities and Cults in Pathupaatu

S. Vennila [a, *], N. Shivajikabilan [a]

[a] Department of Tamil, A.V.V.M. Sri Pushpam College (Autonomous), (Affiliated to Bharathidasan University), Tamil Nadu, India

* Corresponding Author: vennilama19@gmail.com

Received: 27.09.2022
Revised: 10-11-2022
Accepted: 17-11-2022
Published: 01-12-2022

Check for updates

**ABSTRACT**

The human mind is like a weak vine and so it cannot act and grow without any help. Some kind of attachment is inherent to the human mind. Thus the human mind need some support and it surrenders itself to God and with the help of God it clings. The purpose of worship is to transform human beings into the abode of the Lord. It is natural for a person to realize that there is an omnipotent entity that creates and directs all these wide world, the people, other living animals in the world and the movements of the sun and moon. Worship helps to enrich the soul just as nutritious food strengthens the body. The true meaning of worship is to travel on the proper path laid down by our ancestors. Nature worship have been developed into god worship. From that day till today, the ritual of worship continues among the people. The main event. This research is based on the way of investigating that worship is an ethic that seeks to feel and approach the superiority of these concepts.

**Keywords:** Worship, Pathupaatu, Human Mind, Nature Worship

## முன்னுரை

சங்க இலக்கியங்கள் மக்களின் வாழ்க்கை முறைகளைச் சிறப்பாக எடுத்தியம்புகின்றன. அக்காலக் கட்டத்தில் குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை என்று ஐவகை இயற்கைப் பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டு அந்நிலத்தின் அடிப்படையில் மக்கள் அவரவருக்குரிய தெய்வங்களை வழிபாடு செய்து வந்தனர் என்பதனைப் பண்டைய தமிழ் இலக்கியங்கள் வாயிலாகவும் இலக்கணமாகத் திகழும் தொல்காப்பியம் வாயிலாக அறிய முடிகிறது. நிலங்களின் இயல்பு நிலையை அடிப்படையாகக் கொண்டு மக்கள் வாழுகின்ற பகுதியில் தெய்வங்கள் முதன்மை பெறுகின்றன என்பதனை,

“மாயோன் மேய காடுறை உலகமும்

சேயோன் மேய மைவரை உலகமும்

வேந்தன் மேய தீம்புனல் உலகமும்

வருணன் மேய பெருமணல் உலகமும்” (Thamizhannal, 2010)

தொல்காப்பிய நூற்பா வழி புலனாகிறது.

## வழிபாட்டின் தோற்றம்

மனிதன் உணவுக்காக மிருகங்களையும் வேட்டையாடி வாழ்ந்து வந்தான் காலக்கட்டத்தில் இடி, மின்னல், மழை, புயல், வெள்ளம் முதலிய இயற்கைச் சீற்றங்களைக் கண்டு பெரிதும் பயந்தான். அருவிகள், ஆறுகள், காடுகள், மரங்கள், மலைகள் முதலியவற்றைக் கண்டு அஞ்சினான். அவற்றால் என் உயிருக்கே தீங்கு நேருமோ என்று அச்சம் கொண்ட அவன் என்னை ஒன்றும் செய்து விடாதே! என்னைக் காப்பாற்று என்று தொழுது வணங்கினான். இவற்றை மட்டுமல்லாது ஆபத்து தரக்கூடிய கடுமையான காட்டு விலங்குகளான சிங்கம், புலி, யானை, நச்சுப்பாம்புகள் முதலியவற்றையும் அச்சத்தால் வணங்கினான். என்பதனைச் சங்க இலக்கியமான பத்துப்பாட்டு நூலாகிய

"நளிந்துபலர் வழங்காச்செப்பந் துணியின்

முரம்புகண் உடைந்த பரலவற் போழ்வில்

கரந்துபாம் பொடுங்கும் பயம்புமா ருளவே

குறிக்கொண்டு மரங் கொட்டி நோக்கிச்

செறிதொடி விறலியர் கைதொழூஉப் பழிச்ச

வறிதுநெறி ஒரீ இ வலஞ்செயாக் கழிமின்" (Subramanian, 2003)

மலைபடுகடாம் வழி பரலையுடைய பள்ளமான நிலத்தின் பரப்பிலே பாம்புகள் மறைந்து கிடக்கும் குழிகள் உள்ளன. அவற்றை மனத்தாலே குறித்துக் கொண்டு செறிந்த வளையலையுடைய விறலியர் அப்பாம்பின் மனம் மகிழும்படி கையால் தொழுது வணங்கிப் பாதையைக் கடக்கும் செய்தியை அறிய முடிகிறது. அச்சத்தை உண்டாக்கும் மலை முதலியவற்றையும் விலங்குகளையும் மனிதன் தன்னிலும் மேன்மையான சத்தியாக எண்ணினான். கால ஓட்டத்தில் அவற்றைத் தெய்வம் என்று கருதி வணங்கினான் என்ற செய்தியினை,

"பெருவரை அடுக்கம் பொற்பச் சூர்மகள்

அருவி இன் இயத்து ஆடும்" (Subramanian, 2003)

நற்றிணையில் பெரிய மலைச்சாரலில் வீழும் அருவியின் இசைக்கேற்ப தெய்வ மகளிர் ஆடுவர் என்பதனை அறிய முடிகிறது.

"நம் படப்பைச் சூருடைச் சிலம்பில்

சுடர்ப்பூ வேய்ந்து தாம் வேண்டும்

உருவின் அணங்குமார் வருமே" (Subramanian, 2003)

மழைக் குறைந்து அருவிகளும், ஆறுகளும், வறட்சி ஏற்படும் காலங்களில் நீரின் தேவைக்காக மழைபெய்வதாக| என்று அங்கு வாழக்கூடிய மக்கள் மலையுறை தெய்வத்தை வணங்கினார்கள் என்பதையும் அம்மழை மிகுதியினால் மழைத்தரக்கூடிய மேகமே மேலே போவதாக என்றும் வேண்டிக்கொண்டார்கள் என்ற செய்தியினை,

"மலைவான் கொள்க! என உயிர்பலி தூய்

மாரி ஆன்று மலைமேக்கு உயர்க! எனக்

கடவுட் பேணிய குறவர் மாக்கள்" (Subramanian, 2003)

புறநானூற்றில் பாடல் வழி புலனாகிறது. இதே போன்று நெய்தல் நில மக்கள் சுறாமீன் கொம்பை நட்டு அதனைத் தெய்வமாக வணங்கினார்கள் என்பதனைப் பட்டினபாலை வரிகள் எடுத்துக் கூறுகின்றன.

"சினைச்சுறவின் கோடுநட்டு

மலைச்சேர்த்திய வல்லணங்கினான்" (Subramanian, 2003)

இவ்வாறு பண்டையத் தமிழர்கள் இயற்கையை கண்டு அஞ்சியும் அதனை வணங்கியும் வழிபாடு செய்துள்ளனர் என்பதனை அறிய முடிகிறது.

## வழிபாடு என்பதன் பொருள்

வழிபடு என்பதலிருந்து பிறந்து வழிபாடு என்னும் சொல் வழிபடு என்பதற்கு வணங்குதல் பின் பற்றுதல் நெறிப்படுத்துதல் பூசனை முறை என்று அகராதிகள் பொருள் தருகின்றன. இயற்கையோடு இணைந்து தொடங்கிய மனிதனின் வாழ்க்கை முறையானது பலப்பல பரிணாமங்களைப் பெற்று வந்திருப்பதைப் போன்று நம்பிக்கை அடிப்படையில் தோன்றிய வழிபாடும் அதன் முறைகளும் வளர்ச்சி பெற்றே வந்துள்ளதுன. இயற்கை வழிபாடு தொடங்கி இறைவழிபாடு தனிமனித வழிபாடு என்று பல்கிப் பெருகி வாழ்க்கையில் பிரிக்க முடியாத ஒரு கூறாக வழிபாடு நின்று நிலைத்துள்ளது என்பதனை உணரமுடிகிறது

உலகப்பொதுமுறையாம் திருக்குறளில் முதலாவது குறளே இறைவனே மூலமானவன் என்பதனை எடுத்துக்காட்டுகிறது.

"அகர முதல எழுத்தெல்லாம் ஆதி

பகவான் முதற்றே உலகு" (Varadharasan, 2004)

சங்க இலக்கிய நூலான பரிபாடலில் |பக்தியின் வெளிப்பாடு இறைவனை வேண்டும் வரமாகவே போற்றப்படுகிறது|. என்பதனை குடுவன் இளவெயினார் பாடல் வழி புலனாகிறது.

"யாஅம் இரப்பவை

பொருளும் பொன்னும் போகமும் அல்ல நின்பால்

அருளும் அன்பும் அறனும் மூன்றும்

உருள் இணர்க் கடம்பின் ஒள் தாரோயே!" (Swaminatha Iyer, 1986)

என்று அடிகளால் இறைவனைப் போற்றி பக்தி நிலையை அடையும் நிலை தெரிகின்றது.

## வழிபடும் முறை

மாலை வேலையான அந்திப் பொழுதில் தெய்வத்தை வணங்கும் பெண்கள் நிலை பற்றி நெடுநெல்வாடை சித்தரித்துள்ளது. பெண்கள் செழுமையான காம்புகளையுடைய முல்லையின் அரும்புகளை அழகான பூவேலைப்பாடு அமைந்த தட்டுகளில் வைத்திருப்பர். அவை மலர்ந்து மணம் வீசுவதை உணர்ந்து இரும்பாலான விளக்கில் நெய்யிட்டு தீபம் ஏற்றுவர். தன்னிடம் உள்ள நெல்லையும் மலரையும் தூவி இருகைக் கூப்பி இல்லுறை தெய்வத்தை வணங்கினர். மாலை வேளையில் இன்றளவும் விளக்கினை ஏற்றி வழிபடும் நிலை நிலவி வருவதனையும் காணமுடிகிறது. இரவு வேளையில் அச்சமூட்டும் விலங்குகளால் உயிருக்கு ஆபத்து ஏற்படலாம் என்ற அச்சத்தின் காரணமாக விளக்கேற்றுவதனை சடங்காக மாற்றியுள்ளனர். அந்தி வேளையில் ஒளியை வணங்குவதன் மூலம் இரவு குறித்த பயத்தினை கடக்க முயன்றுள்ளனர் என்பது புலனாகிறது.

"மடவரல் மகளிர் பிடகைப் பெய்த

செவ்வி அரும்பின் வைங்கால் பித்திகத்து

அவ் இதழ் அவிழ் பதம் கமழ பொழுது அறிந்த

இரும்புசெய் விளக்கின் ஈந்திரி கொளீஇ

நெல்லும் மலரும் தூஉய் கை தொழுது

மல்லல் ஆவணம் மாலை அயர" (Swaminatha Iyer, 1986)

பட்டினப்பாலை நூலில் பட்டினத்திலுள்ள அங்காடித் தெரு பற்றிய சித்தரிப்பு இறை நம்பிக்கையுடன் தொடர்புடையதாக உள்ளது.

குற்றமற்ற இல்லத்திலுள்ள தெய்வத்தை மகிழச்செய்வதாக வீட்டின் வாயில்கள் மலர்களால் அலங்கரிக்கப்பட்டு பலரும் வணங்கும் கொடிகள் கட்டப்பட்டன. நெல் அரிசி வைக்கப்பட்டுள்ள கலங்கள் உள்ள இடத்தில் வெற்றிலைப் பாக்கினை வைத்துச் சந்தனத்தால் மெழுகி வெண்மையான அரிசி பலியாகத் தூவப்பட்டுள்ளது. தெய்வத்தை வழிபட அன்றைய காலக்கட்டத்தில் வெள்ளிய அரிசியை பயன்படுத்தபட்ட முறை பட்டினப்பாலை வரியின் மூலம் அறிய முடிகிறது.

"மை அறு சிறப்பின் தெய்வம் சேர்த்திய

தாழுடைத் தண் பணியத்து

வால் அரிசிப் பலி சிதறி" (Swaminatha Iyer, 1986)

வழிபாட்டில் அதிகமாக பெண்களே ஈடுபட்டுள்ளனர். பெரும்பாண்மையாக வயது முதிர்ந்த பெண்களே ஈடுபாடு காட்டியுள்ளனர். யாழின் ஒலி ஒத்து வண்டுகள் இசைக்க நெல்லுடன் நாழியில் உள்ள முல்லை மலரைத் தூவி இறைவனைத் தொழுது வணங்கும் முதுபெண்கள் விரிச்சி கேட்டு நிற்கவும் என்ற செய்தியினைப் பத்துப்பாட்டு பக்குவப்பட்ட பெண்களைப் |பெருமுதுப் பெண்டிர்| என்று சுட்டியுள்ளது.

"யாழிசை யனவன் சார்ப்ப நெல்லொடு

நாழி கொண்ட நறுவீ முல்லை

அரும்பவிழ் அலரி தூஉய்க்கை தொழுது

பெருமுது பெண்டிர் விரிச்சி நிற்ப" (Swaminatha Iyer, 1986)

முல்லைப்பாட்டு வரிகள் மூலம் அறியமுடிகிறது. குன்றுகள் தோறும் முருகன் வீற்றிருப்பதனால் மக்கள் தினை அரிசியைப் பூக்களுடன் கலந்து பரப்பி வைத்த அரிசியுடன் ஆடுஅறுத்துக் கோழிக் கொடியை உயர்த்தி அவ்விடத்தில் இறைவன் குடி கொள்வதாக நினைத்து விழா எடுக்கப்பட்ட செய்தியினை.

"சிறுதினை மலரொடு விரைஇ மறியறுத்து"

திருமுருகாற்றுப்படை பாடல் வரி மூலம் அறிய முடிகிறது. செவ்வழிப் பண்ணை இசைத்து யாழ், முழவு, சிறுபறை முழங்க இறைவழிபாட்டிற்கு தேவையான பொருட்கள் பலவற்றுடன் விளக்கேற்றி பால்சோறு முதலான உணவுகளுடன் மயிலை ஒத்த சாயலாய் நடந்து கோயிலில் இறைவனை வழிபட்டனர் என்பதனை,

"செவ்வழி பண்ணிக்

குரல்புனள் நல்யாழ் முழவோ பொன்றி

கடுஞ்சூன் மகளிர் பேணிக் கைதொழுது|" (Swaminatha Iyer, 1986)

மதுரைக்காஞ்சி பாடல் வரிகள் மூலம் பண் இசைத்து வழிபாடு செய்துள்ளனர் என்பது புலனாகிறது. தலைவி தான் அணிந்திருந்த அணிகலன்கள் நெகிழ்ச்சியடைவாதக் கண்டு இவள் நோயுற்றுருக்கிறாள் என்று குறிகூறுவதில் வல்லவர்களையும்> கட்டுவிச்சிகளையும், வேலனையும் என் மகளின் நோய்க்கான காரணம் யாது எனக் கேட்க அவர்கள் தெய்வத்தால் ஏற்பட்டது என்று கூறியதும் இறைவனைப் போற்றியும் வாழ்த்தியும் வணங்கியும் பலவிதமான மலர்களைத் தூவியும் நறுமணப் பொருட்களைக் காணிக்கையாகச் செலுத்தியும் வழிபட்டனர் என்பதனை குறிஞ்சிப்பாட்டு பாடல் வரிகள் நமக்கு உணர்த்துகின்றன.

"கடவுட் பேணி

நறையும் விரையும் ஒச்சியும் அலவுற்று

எய்யா மையலை நீயும் வருத்தி" (Swaminatha Iyer, 1986)

## நடுகல் வழிபாடு

சங்க இலக்கியங்களைப் பார்க்கும் போது நடுகல் வழிபாடு என்பது நம் தமிழர்களின் வாழ்வியல் முறையாக இருந்திருக்கின்றது. போரில் மாண்டோர் கடவுளாக்கப்பட்டு மேலுலகம் செல்வதாகக் கருத்து நிலவப்பட்டது. இறந்தோர் நினைவாகக் கல் நடப்பட்டு வந்துள்ள இவ்வழக்கம் தொன்று தொட்டு தமிழகத்தில் பின்பற்றப்பட்டு சமய நம்பிக்கையாக மலர்ந்தது என்பதனை,

"நடுகல் ஆயினன் புரவலன் எனவே" (Swaminatha Iyer, 1986)

புறநானூற்று பாடல் வழி அறியமுடிகிறது. இதே கருத்தினை

"வையத்துள் வாழ்வாங்கு வாழ்வான் வானுறையும்

தெய்வத்துள் வைக்கப் படும்"

என்கிறார் வான்புகழ் கொண்ட வள்ளுவர் பெருந்தகையும். இதன் பொருள் மண்ணுலகில் சிறப்பாக வாழ்ந்தவர்கள் தெய்வத்திற்கு சமமாக வணங்கப்படுவர் என்பதே ஆகும். தமிழர்கள் ஆதியில் தன்னுடைய முன்னோர்களையே வணங்கி வந்துள்ளனர். இதன் அடையாளமாகத் திகழ்பவையே நடுகல் வழிபாடு ஆகும்.

மலைபடுகடாம் என்றும் ஆற்றுப்படை நூலில் ஒரு பாணர் மற்றொரு பாணரை அரசரைக் கண்டு பரிசில் பெற ஆற்றுப்படுத்துவர். அவ்வாறு வழிபடுத்தும் போது நடுகல் வழி நெடுக இருக்கும் என்று கூறுவர். போர்புரிந்து உயிர் துறந்த வீரர்களின் புகழ்குறித்து நடப்பட்ட நடுகற்கள் பலவும் அவ்வழியில் எண்ணிக்கையில் மிகுதியாகக் காணப்படும். அக்கல்லில் வாழும் தெய்வத்தை உங்களுடைய பாட்டு இன்பத்தை தருகின்ற வழியில் தாளத்தோடு பாடுங்கள் என்று ஆற்றுப்படுத்துவர் என்பதனை

"நல்வழிக் கொடுத்த நானுடை மறவர்

செல்லா நல்லிசை பெயரொடு நட்ட

கல்லேசு கவலை எண்ணுமிகப் பலவே

இன்புறு முரற்கைறும் பாட்டுவிருப் பாகத்" (Swaminatha Iyer, 1986)

இப்பாடலில் வரிகள் மூலம் போரில் வீர மரணம் அடைந்தவர்களை மக்கள் கல்லாக நட்டு அதில் தெய்வம் உறைவதாக நம்பிக்கை கொண்டிருந்தனர் என்பது புலனாகிறது. இதே செய்தியினை ஐங்குநூற்றிலும் காணமுடிகிறது.

"வில்லாற்றால் மிக்க மறவர் வில்லில்

அம்பு விடத் தொலைந்தவருக்கு பெயர்

எழுதி நடப்பட்ட நடுகல் போலச்" (Swaminatha Iyer, 1986)

யானையின் தும்பிக்கையின் சொரசொரப்பை எழுத்துக்கள் பொறித்த நடுகல்லோடு ஒப்பிடுகிறார் ஓதலாந்தையார்.

## நடுகல் நம்பிக்கை

போரில் இறந்த பகைவர் கல்லாகி நின்றதாகத் திருக்குறளும் எடுத்துக் கூறுகிறது.

"என்னைமுன் நில்லன்மின் தெவ்விர் பலர்என்னை

முன்நின்று கல்நின்றவர்" (Varadharasan, 2004)

பண்டைய தமிழர்களின் வாழ்வியல் பதிவுகளை இவ்வுலகிற்கு உணர்த்திடும் சான்றுகள் நடுகற்களின் பங்கு குறிபிடதக்கது நடுகல் வழிபாட்டினைத் தொல்காப்பியர் ஆறு வகையாக கூறியுள்ளார்

"காட்சி கால்கோள் நீர்படை நடுதல்

சீர்த்தகு சிறப்பின் பெரும்படை வாழ்த்தல் என்று

இருமூன்று வகையில் கல்லொடு புணர" (Thamizhannal, 2010)

இந்நூற்பா வழி பண்டையத் தமிழ் மக்களிடம் வேரூன்றி இருந்த வழிபாடுகளில் மிகவும் குறிபிடத்தக்கது இறந்தார்க்கு கல்நட்டு வணங்கும் நெறியாகும். அவர்களின் பெயர்களையும் பெருமைகளையும் பொறித்து கல்நட்டு வணங்கும் மரபு தொல்காப்பியர் காலத்திற்கு முன்பே இருந்துள்ளது என்பதனை அறியமுடிகிறது. இத்தகு நடுகற்களை தெய்வமாகவே வழிபட்டு நாள்தோறும் பலியிடுதல் அன்றைய மரபாயிருந்தது என்பதனை,

"பெயர் மருங் கறியார் கல்லெறிந்து எழுதிய

நல்லரை மரா அத்த கடவுள்" (Subramanian, 2003)

என்ற வரிகள் மூலம் மரத்தின் கீழே உள்ள நடுகற்கள் கடவுளாகவே கருதப்பட்டுள்ளமை தெளிவாகின்றது. நடுகல் அருகே நின்று போர்க்களத்தில் விழுப்புண் பட்டோர் அப்புண்ணைக் கிழித்து உயிர் விடுவர். நடுகல்லை வணங்கினால் மழை வரும் அரசன் சங்க இலக்கியங்களில் அகநானூறு புறநானூறு, மலைபடுகடாம் பட்டினப்பாலை ஆகிய நூல்களில் நடுகல் வழிபாடு போற்றப்பட்டுள்ளமை குறிப்பிடதக்கது. நடுகல் நீரால் கழுவி நெய் அல்லது மஞ்சள் தடவி, வாசனை புகை காட்டி, மாலை சூட்டுவர். மயிற் பீலி வீசி காப்பு நூல் கட்டி பக்கியோடு வணங்குவர்.

குலமரபிற்கேற்பக் கிடாய் அல்லது சேவல் பலியிட்டு சோறிட்டு படைப்பர் வில், வேல், வாள் கொண்டு நடுகல்லை சுற்றி வேலி அமைப்பர். நடுகல் வழிபாடு நம் வீரத்தையும் கலாச்சக்கரத்தையும் எடுத்துக்கூறும் காலக் கண்ணாடியாகும் போன்ற செய்திகளை சங்க இலக்கியங்களில் காணமுடிகிறது.

## முடிவுரை

சங்காலத் தமிழர்கள் தங்களுக்குப் பயன்படுகின்ற ஒவ்வொரு பொருளையும் தெய்வமாகவே போற்றியுள்ளனர். அக்கால மக்களின் இறையுணர்வு பொன்னும், பொருளும், போகமும் அல்ல அன்பும் அருளும், அறனும், வேண்டும் என்றனர். சங்கால மக்கள் தங்கள் இல்லுறை தெய்வத்தை மாலை நேரத்தில் ஒவ்வொரு நாளும் கதிரவன் மறையும் நேரத்தில் வீட்டு முற்றத்தில் மணிவிளக்கு ஏற்றி நெல்லும் மலரும் தூவி வழிபடுதல் மகளிர் பழக்கமாகும் என்பதனை நெடுநல்வாடை மூலம் அறியமுடிகிறது. இதுவே தற்காலத்தில் குலதெய்வ வழிபாடாக மாற்றம் பெற்றுள்ளது. அக்காலகட்டத்தில் தெய்வம் என்ற சொல் அணங்கு, கடவுள் என்ற சொற்களில் பயின்று வந்துள்ளது. வழிபாடுகளில் பெரும்பாலும் பெண்களே ஈடுபட்டுள்ளனர். அவர்களிலும் மூத்த பெண்டிரே பெருபாண்மையாக வழிபட்டுள்ளனர். ஆண்கள் போரின் வெற்றியின் பொருட்டு கொற்றவை வழிபாடு செய்துள்ளனர் என்பது புலனாகிறது. அக்காலமக்கள் இயற்கையைத் தெய்வமாக போற்றியுள்ளமை குறிப்பிடதக்கது. பூசை பொருட்களில் நெல்லும், மலரும் முதலிடம் பெற்றுள்ளன. இவை மட்டும் அல்லாது போரில் இறந்துபட்ட வீரனுக்கு நடுகல் அமைத்து வழிபட்டுள்ளனர். இவ்வாறு வழிபாடு என்பது மக்களின் நம்பிக்கை இயற்கை சார்ந்தே வழிபட்டமை புலனாகிறது.

## References

Subramanian, S.V., (2003) Sanga Ilakkiyam Pathupattu - Moolamum Uraiyum, Koviloor Madalayam, Koviloor, India

Swaminatha Iyer, U, V., (1986) Pathupaattu Moolamum Uraiyum, U, Ve, Sa., Library, Chennai, India.

Thamizhannal, (2010) Tholkappiyam, Manivasakar Pathippagam, Chennai, India.

Varadharasan, Mu., (2004) Thirukkural Thelivurai, The South India Saiva Siddhantha Works Publishing Society, Tinnevelly, India.

**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Authors has no conflicts of interest to declare that they are relevant to the content of this article.

**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author(s) 2022. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License